30.04.2024

O.S.No.29/2014

வா.சா.3.திரு.பக்ருதின் த.பெ.அரபுஷா ராவுத்தர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1.தாவா சொத்து எங்கள் சொத்து என்பதனை காண்பிப்பதற்கு வா.சா.ஆ-3 ஆவணத்தினை தவிர வேறு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ-3 ஆவணம் முழுக்க முழுக்க பொய்யாக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் 1988ம் ஆண்டு எங்களுக்கிடையே ஒரு பாகபிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளதால அந்த ஆவணத்தினை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1986ம் ஆண்டு ஒரு பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டதாகவும், 1988ம் ஆண்டு ஒரு பாகபிரிபினை பத்திரம் ஏற்பட்டதாகவும், நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 1986 பாகபிரிவினை பத்திரமான வா.சா.ஆ-3ல் எனது தாயார் ஒரு தரப்பினர் அல்ல என்றால் சரிதான், ஆனால் அவர் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார். ஆனால் 1988ம் ஆண்டு ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் எனது தாயார் ஒரு தரப்பினர் என்றால் சரிதான்.

2. 1988ம் ஆண்டு எங்களுக்கிடையே ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகபிரிவினை ஆவணம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**-1** ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் A செட்டியூல் சொத்தாக சுலைகாபீவிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். E செட்டியூல் சொத்து இந்த தாவாசொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றாலும், அந்த சொத்தினை நாங்கள் பொதுவாக அனுபவிக்க வேண்டும் என்று அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக E செட்டியூல் சொத்து பொதுச்சொத்தாகஅதில் காட்டப்ட்டுள்ளது என்றால் அந்த இடம் குறைந்த விஸ்தீரணம் கொண்ட இடம் என்பதாலும், எங்கள் நால்வருக்கு இடையே அதை பிரிக்க இயலாது என்பதாலும், அதை நாங்கள்பொதுவாக வைத்துக்கொண்டோம். எனது தந்தை சீனிராவுத்தர் உயிருடன் இருந்த காலத்தில் E செட்டியூல் கட்டுப்பட்ட தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி கருப்பையாவுக்கு குரான் மேல் ஆணையிட்டு சொத்தினை கொடுத்து விட்டதால் அதை எங்களுக்குள் பிரித்துக்கொள்ளாமல் நாங்கள் பொதுவாக வைத்திருந்தோம் என்றால் சரிதான்.

3. எனது தாயாரின் வற்புறுத்தலின் பேரில் தான் பி.வா.சா.ஆ-1 ஆவணத்தில் E செட்டியூல் சொத்து உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் இறப்பிற்கு பின்பு பி.வா.சா.ஆ-1ல் கண்டுள்ள E செட்டியூல் சொத்தை பொறுத்து நான் மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எனது மனைவி பெயருக்கு 2010ம் ஆண்டு விற்கிரைய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அனைவருக்கும் கொடுக்க வேண்டியதை கொடுத்துவிட்டு தான் அந்த சொத்தினை எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்துள்ளோம். 2010ம் ஆண்டு நானும், எனது சகோதரரும் சேர்ந்து எனது மனைவிக்கு சொத்தினை கிரையம் கொடுத்துள்ளதால் அந்த சொத்தினை கிரையம் வாங்கும் அளவுக்கு அவருக்கு பணவசதி எவ்வாறு கிடைத்தது என்றால் நான் வெளிநாட்டில் வேலை பார்த்து

பணத்தினை எனது மனைவிக்கு அனுப்புவேன். அதன் மூலம் அவருக்கு பணம் கிடைத்தது. எனது மனைவி பெயரில் உள்ள வங்கி பாஸ் புத்தகம் நான் தாக்கல் செய்துள்ளேன்.

4. எனது சகோதரிகள் மும்தாஜ்பேகம், மின்னல்பேகம் ஆகியோர்களை பி.வா.சா.ஆ-1 பாகபிரிவினை ஆவணத்தில் தரப்பினர்களாக காட்டவில்லை என்றால் சரிதான். 1988ம் ஆண்டுக்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது நிருபண வாக்குமூலத்தில் நாங்கள் 7 நபர்கள் உடன்பிறந்தவர்கள் என்று சொல்லியதால் அனைவரையும் கட்டுப்படுத்தி பாகபிரிவினை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் 3 பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். 1976ம் ஆண்டு, 1986 மற்றும் 1988 காலகட்டங்களில் பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டுள்ளோம். தாஜுதின் மனைவி எங்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்து அதன் பேரில் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்றால், நான் அந்த சமயத்தில் வெளிநாட்டில் இருந்தேன், எனது மனைவிக்கு விசாரணைக்கு ஆஜர் ஆனார். அந்த புகார் மனுவில் 1988ம் ஆண்டு ஏற்பட்ட பாகபிரிவினை சமயத்தில் அவரது கணவர் தாஜுதின் வெளிநாட்டில் இருந்ததாக சொல்லி உள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

5. தாவாசொத்தில் வில்லங்கம் இருப்பதாக கூறி அதை தீர்த்துக் கொடுக்குமாறு வாதி எப்போதாவது என்னை அணுகினாரா என்றால் இல்லை. தாஜுதின் வெளிநாட்டில் இருந்து இந்தியா திரும்பியதும் அவரையும் சேர்த்து பாகபிரிவினை எழுதியதை எதிர்த்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார், அதற்கு நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளோம். நான் அனுப்பியதாக சொல்லப்படும் பதில் நோட்டிசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சசரிதான். தாவா சொத்தினை கடைசியாக எப்போது பார்வையிட்டேன் என்றால் சுமார் 5, 6 மாதங்கள் இருக்கும். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)